2026 பிப்ரவரி மாதம் 10- ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

I.A.No.2/2024 in O.S. No.3/2018

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10- ஆம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.1-வது நபரின் வாக்குமூலம்

(1969-ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – வேல்முருகன் |
| தந்தை பெயர்: | பெரியசாமி |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | Manager, Legal and Recovery, Cholamandam Investment and Finance Company, Theni Branch. |
| வயது : | 38 |

10.02.2026

(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).
சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை-

1. நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கடந்த 4 ஆண்டுகளாக சோழமண்டல நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் மேற்படி நிறுவனத்தில் Manager, Legal and Recovery பிரிவில் வேலை செய்து வருகிறேன். எங்களது நிறுவனத்தில் பிரதிவாதி பழனியம்மாள் கே.வி.மணிகண்டன் என்பவரிடமிருந்து கிரையம்

பெற்ற 14.11.2017 ம் தேதியிட்ட ஆவண எண்.6786/2022 தேனி, சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணத்தை வைத்து எங்கள் நிறுவனத்தில் அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான்.

2. எந்த வருடத்தில் பழனியம்மாள் அடமானம் வைத்தார் என்றால் 09.01.2018 ஆகும். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க எங்கள் நிறுவனத்திற்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். ஆவண எண்.6786/2022 அசல் கிரைய ஆவணத்தை நான் எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வந்துள்ளேன். அந்த ஆவணத்தை நான் இன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன். அந்த ஆவண எண்.6786/2022 அசல் ஆவணத்தை நீதிமன்றம் மூலமாக தடய அறிவியல் ஆய்விற்கு அனுப்பவுதற்கு எவ்வித ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.02.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.02.10 18:13:19 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
10.02.2026.